★★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 20 ஐப்பசி 23 ஜுல்ஹஜ் 7 இதழ்: 269
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 9 11 8

## 'அமிர்' ஞாயிறன்று கொழும்பு திரும்புகிறார்

### பாராளுமன்றக்குழு அன்றுமாலையில்கூடும்

(கொழும்பு)
எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் ஞாயிற்றுக்கிழமை லண்டனிலிருந்து நேரே கொழும்புக்கு வருகிறார். இலங்கை வரும் வழியில் புதுடில்லியிலும் தமிழ் நாட்டிலும் தங்கும் திட்

(6-ம் பக்கம் பார்க்க)

# இந்திராகாந்தி அமோக வெற்றி!

# அதிகப்படி வாக்குகள் 77,333!

## 26 அபேட்சகர்களும் கட்டுப்பணம் இழந்தனர்

(சிக்மகளூர்)

**கர்நாடக மாநிலத்திலுள்ள சிக்மகளூர் தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில், திருமதி இந்திரா காந்தி, 77,333 அதிகப்படியான வாக்குகள் பெற்று, அமோக வெற்றியீட்டியுள்ளார்.**

**இந்த இடைத் தேர்லில் வாக்களித்த 4 லட்சத்து 53 ஆயிரத்து 068 பேரில், திருமதி இந்திரா காந்திக்கு 2 லட்சத்து 49 376 பேரும் ஜனதா கட்சி வேட்பாளர் திரு. வீரேந்திராபட்டீலுக்கு ஒரு லட்சத்து 72,043 பேரும் சாதகமாக வாக்களித்துள்ளனர்.**

1977-ல் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டு 64,000 அதிகப்படியான வாக்குகளால் வெற்றி பெற்ற டி. பி சந்திர கவுடா (திருமதி இந்திரா காந்தி போட்டியிடும் பொருட்டு) தமது எம். பி. பதவியை ராஜினுமா செய்து கொண்டதன் மூலம், சிக்மகளூர் தொகுதியில் இந்த இடைத் தேர்தல் நடைபெற்றது. இந்திரா காங்கிரஸ் சார்பில் திருமதி காந்தியும், ஜனதா வேட்பாளராக திரு.வீரேந்திராபட்டீலும், வேறு 26 அபேட்சகர்களும் இத்தேர்தலில் போட்டியிட்டனர்.

### 55,000 தமிழர்கள்

இத்தொகுதியின் மொத்த வாக்காளர்களின்தொகை5லட்சத்து 95 ஆயிரத்து 393 ஆகும். வாக்களித்த 4 லட்சத்து 53 ஆயிரத்து 068 பேரில் 2 லட்சத்து 10,000 பேர் பெண்களாகும். கடந்த தேர்தலில் 60 சதவிகிதம் பேர் [3,63,000 வாக்காளர்கள்] இந்திரா காங்கிரஸை ஆதரித்து வாக்களித்திருந்தனா. இங்கு 55,000 தமிழர்கள் வாழுகிறார்கள். இவர்களிற் பெரும் பாலானவர்கள், அ. இ. அ. தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள். தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் திரு

[6ம் பக்கம் பார்க்க]

மழையைத் தொடர்ந்து

## 300 டெலிபோன்கள் யாழ். நகரில் பழுது

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் மத்திய பஸ் நிலையம், பஸ் டிப்போ, ரயில்நிலையம், மின்சார நிலையம் உட்பட 300 தொலைபேசிகள் பழுதடைந்துள்ளன.

கடந்த வாரம் பெய்த பெரும் மழையை அடுத்து நிலத்துக்கடியில் 'கேபிள்' களுக்குள் மழை நீர் புகுந்ததையடுத்தே தொலைபேசிகள் பழுதடைந்துள்ளதாக தந்திப் பொறியியல் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ். நகரில்ஸ்டான்லிவீதி, ஆஸ்பத்திரி வீதி, பருத்தித்துறை வீதி, பலாலி வீதி ஆகிய இடங்களில் உள்ள தொலைபேசிகளே பழுதடைந்துள்ளன.

யாழ். ஆஸ்பத்திரியிலும் பொலிஸ் நிலையத்திலும் விசேட ஏற்பாட்டின் பேரில் தலா இரு தொலைபேசிகள்

(6ம் பக்கம் பார்க்க]

கூட்டணி எம். பி.க்கள்பற்றிய

## ஜனாதிபதியின் கூற்றுபற்றி பண்டிதர் சபையில் கேள்வி

(கொழும்பு)
தமிழர் விடுதலைக்கூட்டணி எம் பிக்கள் சிலர் அரசாங்கத்துடன் சேரவிருப்பதாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன புதுடில்லியில் நிருபர்களுக்களித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டது குறித்து ஊர்காவற்றுறை எம். பீ. திரு. கா. பொ. இரத்தினம் நேற்று பாராளுமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது சபையின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

கட்சியின் அமைப்புச் செயலாளர் என்ற முறையில் தமது கட்சி உறுப்பினர்களிடம் விசாரித்துப் பார்த்ததாகவும் அவ்வாறு எவரும் கட்சி மாறும் நோக்கமில்லையென்றும் திரு. இரத்தினம் தெரிவித்தார். ஜனாதிபதியின் கூற்று தங்கள் கட்சியின் கௌரவத்தைப் பாதிப்பதாகவிருக்கிறதென்றும் இதுபற்றி விளக்கம் தரும்படியும் அரசாங்கத்தை அவர் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதியின் நடவடிக்கைகளை குறித்து சபை உறுப்பினர்கள் கேள்வி எழுப்ப முடியாது என்று சபைக்குத்

(6-ம் பக்கம் பார்க்க)

விசேஷ ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு

## விளக்கம் அளிப்பதற்கு பீலிக்ஸின் நிபந்தனை

(கொழும்பு)
விசேஷ ஜனாதிபதி ஆணைக் குழுவின் முன் முன்னாள் நிதி அமைச்சர் திரு. பீலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்காவின் சார்பில் கடிதம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

ஆணைக்குழு விடுத்துள்ள அழைப்பாணையின்படி குழுவுக்கு தாம் விளக்க அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய கட்டாயம் இல்லையென்றும் தம் மீதான குற்றச்சாட்டுகள் பற்றி தெரிவிக்கப்படுவதுடன் சாட்சிகளைக் குறுக்குவிசாரணை

(6-ம் பக்கம் பார்க்க)

இலங்கைப் பல்கலைக் கழக
வெளிவாரி பட்டப் பரீட்சைகளும் (1979)
பட்டயக் கணக்கறிஞர்
(CHARTERED ACCOUNTANCY) பரீட்சைகளும்
சட்டக் கல்லூரி பரீட்சைகளும்

First In Laws, LL. B-
G. A. Q, B. A.
First In Com., B. Com.
G. S Q B sc. (Statistics)
CHARTERED ACCOUNTANCY.

Law College Examination (சட்டத்தரணி இறுதிப் பரீட்சை) தமிழ் மூலம் மேற்படி பரீட்சைகளுக்கான விரிவுரைகள் 7-1-1979 ஆரம்பமாகின்றன.

க. பொ த. (உயர்தரம்) சித்தியடைந்தோரும் வேறு சமமான அல்லது உயர் தராதரமுடையோரும் விண்ணப்பிக்கலாம். தொழில் புரிவோருக்கும் ஏற்ற நேரங்களில் விரிவுரைகள் நடாத்தப்படும்.

கடந்த வருடங்களில் மிகக் கூடுதலான மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

1974ல் — 90% மாணவர்களும்
1975ல் — 60% மாணவர்களும்
1976ல் — 80% மாணவர்களும்
சித்தியடைந்துள்ளனர்.

1977 — பெறுபேறுகள் இன்னும் வெளியாகவில்லை.

௦ விசேட ஆங்கில வகுப்புகளும் உண்டு.

மாணவர்களுக்கு விண்ணப்பப் படிவங்களும், விபரத் தொகுப்பும் இலவசமாக வழங்கப்படும். கடிதமூலமோ, நேரிலோ உடன் தொடர்பு கொள்க.

பதிவாளர்,
யாழ். சட்டக் கல்வி நிலையம்,
தையல் முத்து மாளிகை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

## "இனவாத அடிப்படையில் குடியேற்றத்திட்டம் இல்லை"

### சென்னையில் ஜனாதிபதி தகவல்

சென்னை, நவ. 8
இலங்கையில் இனவாத அடிப்படையில் குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்படமாட்டாது என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன சென்னையில் உறுதி அளித்தார்.

சென்னையில்பத்திரிகையாளர் மத்தியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ஜெயவர்த்தன அங்கு மேலும் கூறியதாவது-

இலங்கையில் தமிழ் பேசு மக்களின் பிரச்னைகள் யாவும் தீர்க்கப்பட்டுவிட்டன. கிழக்கு மாகாணத்திலுள்ள 13 தொகுதிகளில் 9 தொகுதிகளில் கடந்த தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வெற்றி பெற்றுள்ளது. நான்கு தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களில் சிலர் அரசில் சேர விருப்பம் தெரிவித்துள்ளனர். இது நான் கொழும்பு திரும்பியதும் முடிவு செய்யப்படும்.

இலங்கையில் உள்ள சகல பிரச்னைகளையும் தீர்க்க புதிய அரசியல் அமைப்புத் திட்டம் இடமளிக்கிறது. தேசிய ரீதியிலேயே இலங்கையில் அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறினார். (இ)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

8 ஸ்ரீ தொடர்பு இலக்கம் கொண்ட ஸ்கூட்டர் விற்பனைக்கு உண்டு. முகவரி மா திருவாசகர் 'விமல மலர்' வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை. 0750

### தேவை

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் உள்ள நெசவுநிலையம் ஒன்றில் வேலை செய்வதற்கு இரண்டு வருட அனுபவமுள்ள பெண்களும், வேலை பழகும் பெண்களும் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். இ நடராசா, சுதுமலை தெற்கு. ஆனைக்கோட்டை. 0742

### CLASSES

A. M. I. M. I. (Inter & Final). City & Guilds (Electrical). Revision (A/L) Physics. Contact: V. Sachithananhan B. Sc., M. I. E., K. K. S. Road, Tellipallai. 0744

### மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்

## ஏலவிற்பனை அறிவித்தல்

யாழ்ப்பாணம், தேவாலய வீதி, 2ஆம் குறுக்குவீதி சந்திக்கருகில் உள்ள மகோக்கனி மரம் ஒன்று 13-12-78 ஆம் திகதி மு ப 9-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

சித்திபெற்ற கேள்விக்காரர் பணத்தை உடனடியாகச் செலுத்தி மரத்தையும் உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும்.

க. சிவஞானம்
விசேட ஆணையாளர்
யாழ். மாநகராட்சிமன்றம்.
7-11-78. 0747

### நல்லூர் ப. நோ. கூ. சங்கம் கட்டிட கூலி வேலைக்கான

## கேள்விப் பத்திரம்

சங்கத்திலை நிர்மாணிக்கப்பட இருக்கும் 3000 சதுர அடிக் களஞ்சியக் கட்டிடக் கூலிவேலைக்கு தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. சங்கக் காரியாலயத்தில் ரூபா 10/- செலுத்தி கூலிவேலை விபரப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பிக்கவிரும்புவோர் வைப்புப் பணம் ரூபா 100/-செலுத்த வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி 18-11-78.

பொதுமுகாமையாளர்.
0748


# "தீண்டாமை ஒழியுமுன் இனப் பெருமை பேசுவதா?"

## வித்தியாதிபதி கண்டனம்

(மட்டுவில்)

"பாடசாலைகளின் உயர்ச்சி முழுக்க முழுக்க ஆசிரியர்கள், மாணவர், பெற்றோர் ஆகியோரின் கைகளிலேயே தங்கியுள்ளது. இந்த அடிப்படை உண்மையை என்றும் மறந்துவிடக் கூடாது பாடசாலைகளின் உயர்வுக்கு சமத்துவம்-சகோதரத்துவம் ஆகிய பண்புகளும் அத்தியாவசியம். இந்தவகையில் ஆசிரியர்கள் முன்மாதிரியாகத் திகழவேண்டும். சாதிக்கொடுமை ஒழியாமல் தமிழன் பெருமை பேசிப் பயனில்லை."

இவ்வாறு வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் நாவற்குளி மகாவித்தியாலய விஞ்ஞான கூடத் திறப்புவிழாவில் பேசும் போது கூறினார்.

நாவற்குளி மகாவித்தியாலயத்தின் புதிய விஞ்ஞானகூடத் திறப்பு விழாவில் வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. மாணிக்கவாசகர், முன்னாள் நாவற்குளி கிராமசபைத் தலைவர் திரு. எஸ். சடாச்சரம் ஆகியோர் மங்களவிளக்கேற்றி வைக்க, சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் சமயாசாரப்படி திறந்துவைத்தார்.

இதைத் தொடர்ந்து வித்தியாலய அதிபர் திரு ஏ. சின்னத்துரையின் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

கல்விப் பணிப்பாளர் திரு. மாணிக்கவாசகர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இன்று சமூகக் குறைபாடுகள் காட்டும் சாபக்கேடு நமது தமிழர் மத்தியில்மட்டுமே தென்படுகிறது. சமூகக் குறைபாடுகள்போன்ற மிகவும் கீழ்த்தரமான செய்கைகள் நமது மத்தியிலே இன்னமும் இருந்துகொண்டிருக்கும் போது நமது கல்வியில்கூட வளர்ச்சி காணமுடியாது. இந்த நிலையில் நமது தலைவர்கள் "தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" என்று சமூக ஒற்றுமைக்காக முழங்குவதில் அர்த்தமில்லை. முதலில் சமூகக் குறைபாடுகளை ஒழிக்கவும், சமதர்மம், சகோதரத்துவம் தழைத்தோங்க ஆசிரியர், மாணவர்களே முன்மாதிரி காட்டவேண்டும்" என்றார்.

சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் பேசுகையில், நமது மத்தியிலே எழும் சமூகக் குறைபாடுகள் என்ற அசுர சங்காரம் நடைபெற்றுக்கொண்டே இருக்கிறது என்றார். (உ)


### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற காரைநகர் மேற்கு சின்னத்தம்பி அம்பலவாணர் ஆறுமுகம் என்பவரின் மரணசாதனத்தின் சொத்தின் விடயத்தில்

மரணமெய்தி வர் சின்னத்தம்பி அம்பலவாணர் ஆறுமுகம் கைம்பெண் தையல்முத்து புதுரேட்டு. காரைநகர் வடக்கு, காரைநகர்

மனுதார்

மரணசாதன நியாயாதிககம் இல. 3391

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 13ஆந் நாளன்று முற்பகல் 10-00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
(ஒப்பம்)
பதிவாளர்
7-9-78

காரணங் காட்டுவதற்கு திகதி 1-12-78க்கு நீடிக்கப்பட்டது.

பொ. பாக்கியநாதன்
(ஒப்பம்)
பதிவாளர்
13-10-78 0749




இரத்மலானை சமூக அபிவிருத்தி நிலையத்தின் சுகாதார திட்டங்களுக்காக டார்லி பாட்லர் அன்ட் கம்பெனி லிமிட்டெட்டின் நிர்வாக டைரக்டர் திரு. மொறிஸ் டீ ஆப்று, ஐந்து பெட்டி விவா மோல்ட்டெட் பால்மாவை வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியிடம் கையளித்தபோது எடுக்கப்பட்ட படம்.

வர்த்தக அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி மேற்படி நிலையத்தின் போஷகராவார். விவா மோல்ட்டெட் பால்மா ஏஜென்ஸியான ஈஸ்டேர்ண் ஏஜென்ஸின் நிறுவன நிர்வாக டைரக்டர் திரு மகிந்தா செனிவிரத்னவும் படத்தில் காணப்படுகின்றார்.

# சைக்கிள் சொந்தக்காரர்களே உஷார்!

(யாழ்ப்பாணம்)

சைக்கிள்களுக்கு லைசென்ஸ் பெற்றுக்கொள்ளாமல் யாழ் மாநகரசபைக்கு டிமிக்கி கொடுத்த சைக்கிள் சொந்தக்காரர்களை யாழ் மாநகரசபை வரி சேகரிப்பவர்கள் பொலிசாரின் உதவியுடன் பிடித்து வருகிறார்கள்.

நேற்றுக்காலை நகரின் பிரதான சந்திகளில் இப் புதிய முறை மூலம் லைசென்ஸ் இல்லாத சைக்கிள்காரர்கள் லைசென்ஸ் பெற்றுக்கொண்ட பின்னரே பயணத்தைத் தொடரமுடிந்தது. நேறறு மட்டும் 500க்கு அதிகமானவர்கள் சைக்கிள்களுக்கு லைசென்ஸ் எடுத்தனர். (ஜெ)


## கீழ்க்காணும் வாகனங்கள் விற்பனைக்குண்டு

22 SRI 6293 மொறிஸ்
22 SRI 621 ,,
22 SRI 3572 ஒஸ்றின்

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-
முகாமையாளர்,
த பிறுன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
191, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

வாகனங்களைப் பார்வையிட ஒழுங்குசெய்து தரப்படும். கேள்வி விண்ணப்பங்கள் 25-11-1978வரை ஏற்றுக் கொள்ளப்படும்.


### விவசாய அறிவுப்போட்டி

[வேலணை]

தீவுப்பகுதி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் நடாத்தப்பட்ட விவசாய அறிவிப் போட்டியில் பரிசு பெற்றவர்களின் விபரம் வருமாறு: செல்வி ஆன்மேரி கரம்பன் விஜேபாஜி இ. வி. கழகம் வி சீதாலட்சுமி புங்குடுதீவு இ. வி. கழகம் தபோகரன் நயினாதீவு இ. வி. கழகம் ஆறுதல் பரிசுகள் பெறுபவர்கள் புவனேஸ்வரன் நயினாதீவு இ. வி. கழகம் கு. மாகில்லா கரம்பன் இ. வி. கழகம் த லீலாவதி மண்கும்பான் இ வி. கழகம் ஏ, ஜெயலட்சுமி மண்கும்பான் இ. வி கழகம் காந்தரூபன் மண்டைதீவு இ. வி கழகம் கோகுலபாலன் மண்டைதீவு இ. வி கழகம் மனோண்மணி புங்குடுதீவு இ. வி. கழகம் [உ]

## புதிய பஸ் சேவை

(புலோலி)

புதுக்குடியிருப்பிலிருந்து பருத்தித்துறைக்கு சென்ற வாரம் தொடக்கம் புதிய பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது, விவசாயிகளின் நன்மைகருதியே இந்த பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பாராளுமன்ற உறுப்பினர் திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு இந்த பஸ் சேவையை ஆரம்பித்துவைத்தார். (உ)

## "கலையுலகுக்குப் பேரிழப்பு"

(யாழ்ப்பாணம்)

"ஈழத்துத் திரைவானில் ஒப்பற்ற நடிகையும், பாடகியுமான ருக்மணிதேவியின் பிரிவு ஈழத்துக் கலைஞர்கள், திரைப்பட ரசிகர்கள் அனைவருக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது" என்று ஈழத் தமிழ்ப் படத்தில் திருமதி ருக்மணி தேவியுடன் சேர்ந்து நடித்தவரான திரு. சிவகணேசன் தமது கவலையைத் தெரிவித்தார்.

"டெய்ஸி அக்கா என்று அருமையாக அழைக்கப்படும் திருமதி ருக்மணிதேவியுடன் ஜோடி சேர்ந்து நடித்த பாக்கியத்தைப் பெரும் பேறாகக் கருதுகிறேன். இளையதலைமுறை நடிகர்களுக்கு நல்ல புத்திமதிகள் சொல்லிக் கலைத்தாயின் புதல்வர்களை நல்ல கலைஞர்களாக்கிய மூத்த கலைஞரான திருமதி ருக்மணிதேவியின இழப்பு, ஈழத்துக்கு மட்டுமன்றி, கலையுலகிற்கே ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்" என்று திரு. சிவகணேசன் தமது செய்தியில் தெரிவித்துள்ளார். (அ)

### கனிஷ்ட அதிபருக்கு பிரிவுபசாரம்

[யாழ்ப்பாணம்]

"பல ஆண்டுகளாக வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தில் கனிஷ்ட அதிபராகக் கடமையாற்றிய திரு. சி. கனகசுந்தரம் குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயத்துக்கு அதிபராக இடமாற்றம் பெற்றுச் சென்றமை குறித்து வயாவிளான் மத்திய மகா வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் பிரியாவிடைவைபவம் ஒன்றை நடத்தினர் அதிபர் திரு ஆ இராமசாமியின் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் செல்வன் சு செல்வநேசனும் ஆசிரியர்கள்கவிமணி வி. கந்தவனம் திரு சி சுப்பிரமணியம் ஆகியோரும் திரு சி கனகசுந்தரம் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்துக்கு ஆற்றிய சேவைகளைப் பாராட்டிப் பேசினர். சங்கீதபூஷணம் வி. சிவஞானசேகரம் பிரியாவிடைப் பாவைட்பாடி வழங்கினர். ஆசிரியர் கழகத்தின் சார்பில் தேநீர்விருந்துபசாரமும் நடைபெற்றது. [ஈ]


PERCIVAL HALL
Chapel Street, Jaffna

I. C. M. A.
Foundation A

Applications Close 14-11-78

Enrolment on 18-11-78

Classes Commence 20-11-78

I C.M.A. Foundation B
Professional 1

Applications Close 4-12-78

Enrolment on 8-12-78

Classes Commence 9-12-78

0739

## ஈழநாடு

### புதிய வரவு-செலவுத் திட்டம்

திரு. ஜே ஆர். ஜய வர்த்தன தலைமையிலான ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு-செலவுத்திட்ட மதிப்பீடு ஆட்சிமன்றத்தில் நிதியமைச்சரால் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது.

1979ம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளின்படி 802 கோடியே 30 இலட்சத்து 59 ஆயிரத்து 171 ரூபா துண்டுவிழுகிறது.

துண்டுவிழும்எண்ணூற்றிரெண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை எவ்வாறு சரிக்கட்டப் போகிறார் என்பதை நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் இம்மாதம் பதினைந்தாம் தேதி நிகழ்த்தவிருக்கும் வரவு செலவுத் திட்ட உரையில் தெரிவிப்பார்.

நடப்பு ஆண்டில் 429 கோடிக்குச் சற்று மேற்பட்ட தொகையே பற்றாக் குறையாக இருந்தது. இதனுடன் ஒப்பிடுகையில் அடுத்தாண்டில் துண்டு விழும் தொகை இரட்டிப்பாகும்.

சுதந்திரவர்த்தக வலயத்துக்கு 12 கோடியே 30 லட்ச ரூபாயும்; பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத்திட்டத்துக்கு 30 கோடியே 60லட்சம் ரூபாயும் போக்குவரத்துக்கு 70 கோடியே 20 லட்சம் ரூபாயும் மகாவலி அபிவிருத்தித்திட்ட மூலதன செலவினங்களுக்கு 34 கோடியே 40 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

இவையாவும் அத்தியாவசிய செலவினங்கள்தான். உழைப்பின்றி வாழ்வோருக்குச் சகாயநிதியாக வழங்குவதற்கு 24 கோடியே 30 லட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஆண்டுதோறும் வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை அதிகரித்துவருகின்றது. மக்கள் தொகை அதிகரித்து வருவதாலும் அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும் செலவினங்கள் அதிகரிக்கப் படுவது தவிர்க்கமுடியாதது

முன்னரெல்லாம் உணவு மான்யத்துக்கும் ஒரு தொகை ஒதுக்கப்பட்டு வந்தது. இலவச அரிசி நிறுத்தப்பட்டுவிட்டதால் உணவு மான்யத்துக்கு நிதி ஒதுக்கவேண்டிய அவசியமில்லாதுபோய்விட்டது

யூரியா உர உற்பத்திக்கு 54 கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தினால் உணவுற்பத்தி அதிகரிக்கும் என எதிர்பாரப்பதால் உணவுற்பத்திக்கு அத்தியாவசியமான உரத்துக்கு இன்னமும் வெளிநாடுகளை எதிர்பார்த்திராமல் நமது நாட்டிலேயே உர உற்பத்திக்கு நடவடிக்கை எடுப்பது வரவேற்கவேண்டிய விஷயம்.

புதிய வரிகள் விதிக்கப் படுமா? அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் மேலும் அதிகரிக்குமா? என்று மக்கள் கவலைப்படுவது இயல்பு.

இப்பொழுது பொருள்களுக்குத் தட்டுப்பாடில்லையென்பது உண்மையே. ஆனாலும் விலைவாசிகள் உயர்ந்து வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கமுடியாது மக்கள் கஷ்டப்படுகின்றனர். இது நிதியமைச்சருக்குத் தெரியாததல்ல. அரசாங்க ஊழியருக்கும் தனியார்துறை ஊழியருக்கும் சம்பளத்தை அதிகரிப்பதால் வாழ்க்கைச்செலவுக் கஷ்டத்தை சமாளித்துவிட முடியாது.

புதிய வரவுசெலவுத்திட்டம் மக்களுக்கு ஆறுதலளிக்கக்கூடியதாக அமையுமென்றே எதிர்பார்ப்போம்.

மட்டக்களப்பு

# இந்து மகளிர் மன்ற திருமுறை விழா

## நாளை ஆரம்பமாகிறது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இந்துமகளிர் மன்ற திருமுறை விழா நாளை ஆரம்பமாகிறது.

நாளை வெளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை மூன்று தினங்கள் மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடைபெறும் திருமுறை விழாவின் முதல்நாள் நிகழ்ச்சிகளுக்கு உயர் திரு. ஜீவனானந்த அடிகளார் தலைமை வகிப்பார்.

ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தாஜீ, பிரம்மஸ்ரீ வி. வரதராஜக்குருக்கள், கொழும்புஇந்து சமய விவகார ஆலோசனைச் சபை உறுப்பினர்கள் வித்துவான் வி. சி. கந்தையா, திரு. எஸ். சிதம்பரப்பிள்ளை, மட்டக்களப்பு இந்து இளைஞர் சங்கத் தலைவர் திரு. பி. ரி. அரசன், ஆனைப்பந்தி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு க. சண்முகராசா, டாக்டர் வே. பஞ்சாட்சரம், திருவாளர்கள் கே. வி. எம். மாணிக்கவாசகர், ச, கு. கணேசநாதன். ஆர். இரத்தினசிங்கம் ஆகியோர் மங்களவிளக்கேற்றி விழாவைத் தொடக்கிவைப்பார்கள்.

இதனைத் தொடர்ந்து பிரம்மஸ்ரீ வி. வரதராஜக்குருக்கள் திருமுறைச் சுவடிகளுக்கும் நடராஜர் திருவுருவத்திற்கும் கற்பூர ஆராதிகாட்டி ஆசியுரை வழங்குவார்.

பண்ணிசை வேந்தன் ஆர். குழந்தைவேலின் திருமுறை ஓதுதலைத் தொடர்ந்து தலைவர் உரைநிகழ்த்துவார். இதனைத் தொடர்ந்து சிவத்தமிழ்ச் செல்வி டண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. வை. நடனசபாபதிசிறப்புரை நிகழ்த்துவார்கள். திரு பி. சிவலிங்கத்தின் இன்னிசை விரிவுரையைத் தொடர்ந்து முதல் நாள்விழா முடிவடையும்.

### திருமுறை விழாவுக்கு தங்கம்மா தலைமை

(மட்டக்களப்பு)

கல்வி, கலாச்சார அமைச்சு மட்டக்களப்பு நகரசபை மண்டபத்தில் நடாத்தும் திருமுறை விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு எதிர்வரும் சனிக்கிழமை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி தலைமை தாங்குகிறார்.

மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றம் இந்நிகழ்ச்சிக்குரிய ஒழுங்குகளை செய்துள்ளது.

இவர் எழுதிய கந்தபுராணச் சொற்பொழிவுக்கு கலாசார அமைச்சு சாகித்திய மண்டலப் பரிசு வழங்கியுள்ளதும் குறிப்படத்தக்கது.

(உ)

ஆசிரியருக்குக் கடிதம்:

# யாழ். பஸ்சேவை

கடந்த 3ம் திகதி வெள்ளிக் கிழமை பி. ப. 12-20 மணிக்கு கொழும்பில் இருந்து புறப் பட்ட ரயிலில் பிரயாணஞ் செய்தவர்களில் நானும் ஒருவன். ரயில் தம்புத்தேகம நிலையத்தை அடைந்தபோது, யாழ்ப்பாணத்திலிருந்து வர வேண்டிய ரயில் வெள்ளம் காரணமாக, 3 மணித்தியாலங்கள் தாமதித்தே வரும் என்ற செய்திகிடைத்தது, வதந்திகள் தாராளமாகப் பரவின. யாழ்ப்பாணத்திலிருந்து விட்டுக்குப்போக பஸ் கிடைக்குமா என்பதே அனைவரது கவலையாகவுமிருந்தது. அந்தக் கவலை நியாயமானதே. எவ்வளவு நியாயமானது என்ற கசப்பான உண்மை, அதிகாரிகளின் அசட்டை காரணமாக இரவு 8-45 மணிக்கு யாழ்ப்பாணத்தை அடைந்த போது புலனாகியது.

புகையிரத நிலையத்துக்கு வழமையாக வரும் பஸ் அன்று வராதது சந்தேகங்களையும் பீதியையும் மேலும் ஏற்படுத்தியது. பஸ் நிலையத்துக்குவரும் பாதையில், பருத்தித்துறை வீதியில் 1/2 அடி வெள்ளம் காணப்பட்டது. பெட்டி படுக்கைகளுடனும் பிரயாணக் கனையுடனும் பிரயாணிகள் பட்ட அவஸ்தையை நேரில் பார்த்தே உணரமுடியும். பஸ்நிலையம் வந்து சேர்ந்த போது காலில் ஏற்பட்ட "கடியும் சொறியும்" வெள்ளத்தின் தரத்தை உணர்த்தின.

பஸ் நிலையத்தில் சுமார் 6 அல்லது 7 பஸ்களே காணப் பட்டாலும் 769 காங்கேசன் துறை பஸ்ஸின் மட்டுமே சீட்டுகள் வழங்கப்பட்டன. அதிர்ஷ்டவசமாக நான் அந்த பஸ்ஸில் பிரயாணஞ்செய்யக் கூடியதாக இருந்தது. ஏனைய பாதைகளில் செல்லவேண்டியவர்களின் கதி! காங்கேசன் வீதியில் அந்த பஸ்ஸைத் தவிர ஏனைய பஸ்கள் போகமாட்டா என்ற நிலை தெரிந்ததும் அனைவரும் கியூவில் இடம் பிடித்தனர். (ரயில் யாழ்ப்பாணத்தில் நிறுத்தப்பட்டுவிட்டது).

சீட்டுக்கள் கொடுக்கத் தொடங்கிய நேரம் முதல் நான் மல்லாகத்தில் இறங்கும் வரை சாரதியும் நடத்துநரும் பிரயாணிகளுடன் நடந்து கொண்டமுறை பாராட்டுக் குரியது (அவர்கள் இருவரும் மிகவும்இளவயதினர் என்பதும் ஒரு காரணமோ) பஸ் புறப் படுமுன் நடத்துநர் அடிக் கொருதரம் "அடிக்கொருதரம் "முன்னுக்குப்போங்கோ மற்றவையும் வரவேணும்" என்று மிக மரியாதையுடன் சத்தமிட்டதையும், சாரதி ஒருதரம் வந்து "இதுதான் கடைசி பஸ், ஒரு மாதிரி எல்லாரும் ஏறுங்கோ" என்று சொன்னதையும் தவிர அவர்களுக்கும் பிரயாணிகளுக்கு மிடையே வேறெந்த பேச்சு வார்த்தையும் இருக்கவில்லை. பிரயாணிகள் கூட மிகவும் பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொண்டனர். அநேகமாக எல்லாத் தரிப்புகளிலும் பஸ் நிறுத்தப்பட்து. சில சந்தர்ப்பங்களில் பஸ்ஸின் நடுப் பகுதியில் இருந்தவர்கள் இறங்குவதில் சற்றுத்தாமதம்கூட ஏற்பட்டது. அப்போது மிகவும் கஷ்டமான சூழ்நிலையில்கூட சாரதியோ நடத்துநரோ பிரயாணிகளோ பொறுமையை இழக்காது பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொண்டது பாராட்டுக்குரிய விஷயம், பெருமைப் படக்கூடிய விஷயம்.

ரயில் யாழ்ப்பாணத்துடன் நிறுத்தப்படும் என்பது முன் கூட்டியே இ. போ. ச. அதிகாரிகளுக்கோ உத்தியோகத் தருக்கோ தெரியாதா? இரண்டு பஸ்களையாவது புகையிரத நிலையத்துக்கு அனுப்பாதது ஏன்? பஸ் நிலையத்தில் பஸ்கள் நின்றது, குறைந்தது ஒரு சாரதியும் ஒரு நடத்துநரும்,

(5-ம் பக்கம் பார்க்க)

### புலவர்மணிக்கு இரங்கல்

# அனைத்திலங்கைக்கும் ஒளிதந்த மணிச்சுடர்

(யாழ்ப்பாணம்)

கிழக்கிலங்கையின் மணிச் சுடர் அனைத்திலங்கைக்கும் ஒளிதந்தது அவர் மறைவால் நம்மையெல்லாம் துன்ப இருள் மூடிக்கிடக்கிறது.

யாழ்ப்பாணம், நாயன்மார் கட்டு முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை மறைவு குறித்து வெளியிட்டுள்ள இரக்கல் செய்தியில் இவ்வாறு கூறியுள்ளது அச்செய்தி வருமாறு:

அமரராகிவிட்டபுலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையின் மறைவால் தமிழ் அன்னை வறியவளானள். ஈழத்துத் தமிழ் மக்கள் ஆற்றுவாரும் தேற்றுவாரும் இன்றிப் புலம் பியவண்ணம் இருக்கின்றனர். இப்பெருந்தகையாளரின் இழப்பினை ஈடுசெய்வது அரிதிலும் அரிது.

சுன்னாகம் குமாரசாமிப் புலவரதும் விபுலானந்த அடிகளாரதும் அரவணைப்பிலே அருந் தமிழ் கற்றுப் பெரும்புலவராகி வாழ்நாளின் இறுதிவரை தமிழ்த் தொண்டாற்றிய புலவர்மணி நமக்குச் செய்த நன்றி காலத்தாற் செய்ததாகும். அது ஞாலத்தின் மாணப் பெரிது என்பதற்கு ஐயமில்லை.

கிழக்கிலங்கையின் மணிச் சுடர் அனைத்திலங்கைக்கும் ஒளி ஈந்தது. தமிழகமும் அதன் பிரகாசத்தைப்போற்றி மகிழும்வேளையிலே திடீரென்று மறைந்து போயிற்று. எம்மையெல்லாம் துன்ப இருள் மூடிக் கிடக்கிறது.

பகவத் கீதை வெண்பாவையும், 'உள்ளதும் நல்லதும்' என்னும் கட்டுரை வரிசையையும் இன்னும் பல கட்டுரைகளையும், கவிதைகளையும் வரையாது வழங்கியும், 'ஈழமணித் திருநாட்டை' வாயார மனமார வாழ்த்தியும் வாழ்ந்த வள்ளலை எப்புலவர் பெருமானைக் காலனின் கொடிய கரங்கள் இரக்கமின்றி இவ்வளவு விரைவில் இழுத்துச் செல்லும் என்று எவரும் எதிர்பார்த்திருக்கவில்லை.

அமரர் புலவர்மணியின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் தன் ஆழ்ந்த அனுதாபங்களையும் செலுத்துகிறது.

# கேரதீவு பஸ் சேவை

கேரதீவு பஸ் பிரயாணிகளுடைய பல வருடகால வேண்டுகோளின்படி 1-10-78 முதல் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்ட, பகல் 1-30 மணிக்கு யாழ். டஸ்நிலையத்திலிருந்து கேரதீவுக்குச் சேவையிலீடுபட்ட பஸ், 1-11-78 முதல் இடை நிறுத்தப்பட்டுள்ளது. இந்த பஸ் சேவை ரத்துச் செய்யப்பட்டதற்கான காரணம், இவ்வீதியில சேவையாற்றும் பஸ் நடத்துநர்களும் சாரதிகளும் . கூட்டாக மேலிடத்திற்குக் கோரிக்கை விடுத் தமையால்தான் என அறிகின்றோம்' இவர்கள் இச்சேவையை ரத்துச்செய்ததற்கான காரணம், 1-30 மணிச் சேவையினால் தங்களுக்கு மேலதிக ஊதியம் கிடைக்காமையே என்பதனை அறியமுடிகின்றது. பஸ் சேவை பிரயாணிகளுக்காக நடத்தப்படுகின்றதா? அல்லது பஸ் சேவையிலிருப்பவர்களுக்காக நடத்தப்படுகின்றதா? அவர்களின் இலாபத்தைக் கருதி இச்சேவையை இ. போ. ச. நடத்துவதானல் பிரயாணிகளுக்குச் சிறந்த சேவையை அளிக்கமுடியாது இச்சேவை நிறுத்தப்பட்டது தொடர்பாக ஒரு இ. போ. ச. அதிகாரியை வினவிய போது 1-30 மணிச் சேவையினால இ. போ. ச.வுக்கு வருமானம் குறைவு. எனவே தான் இச்சேவை நிறுத்தப் பட்டுள்ளது எனக் கூறினர். காரணம் அதுவல்ல.

வடபகுதி டிப்போவில் 16 மைல் தூரத்திற்குச் சேவையாற்றும் எந்தவொரு பஸ்ஸின் வருமானத்தையும்விடக் கேரதீவு பஸ்தான் கூடுதலான வருமானத்தைப் பெற்றுத்தருகிறதென்பதை இ. போ. ச. வின் எந்தவொரு அதிகாரியும் மறுக்கமுடியாது. எனவே வடபிராந்திய இயக்குநர்சபை, பஸ் நடத்துநர், சாரதிகளின் லாபம் கருதாது, கேரதீவு பஸ் பிரயாணிகளுடைய நலன் கருதி 1-30 மணிச் சேவையை உடன் நடத்துவதற்கான நடவடிக்கையை எடுத்து, எமக்குத் தொடர்ந்தும் அச் சேவையை நடத்தும்படி கேரதீவுப் பிரயாணிகளின் ஏகோபித்த கோரிக்கையாக வட பிராந்தியச் சபையிடம் கேட்டுக்கொள்கிறோம். கேரதீவுக்குப் பகல் 12 மணிக்குப் பின்னர் 2-30 மணிக்குத்தான் அடுத்த சேவை உண்டு அது வரை பிரயாணிகள் பொறுமையுடன் நிற்கமுடியாது. இதனைப் பயன்படுதத்தித்தான் தனிப்பட்ட வான்காரர்கள் கேரதீவுப் பிரயாணிகளை ஏற்றிச் செல்கின்றனர் 1-30 மணிச் சேவை இருந்தபோது தனிப்பட்ட வாகனக்காரர் களால் கேரதீவுப் பிரயாணிகளை ஏற்றிச்செல்லமுடியவில்லை என்பதை, இயக்குநர்சபை கவனத்திற்கொண்டு இ போ ச.வினதும், பொதுப்பிரயாணிகளினதும் நலன்கருதியும் உடனடியாக 1-30 மணிச் சேவையை நடத்துமென எதிர் பார்க்கின்றோம்.

கேரதீவு பஸ் பிரயாணிகள்

## மணிவாக்கு

உண்மை நட்பு என்பது நல்லாரோக்கியத்தைப் போன்றது. அது இல்லாமல் போகும் வேளையில் தான் அதன் அருமை புரிகிறது.

சி. சி. கோல்டன்.

# திருமதி காந்தியின் வெற்றி அரசியலில் மாற்றத்தை ஏற்படுத்தாது

## பிரதமர் மொரார்ஜி கருத்து

புதுடில்லி, நவ. 8
முன்னுள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சிக்மகளூர் இடைத்தேர்தலில்வெற்றி பெறும் பட்சத்தில் இந்திய அரசில் எவ்வித மாற்றமும் ஏற்படமாட்டாது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய் கருத்துத் தெரிவித்துள்ளார்.

திருமதி காந்தி வெற்றி பெற்ருல், அவரது ஆட்சியின் போது அமுல் செய்யப்பட்ட அவசரகாலச் சட்டத்தை மக்கள் ஏற்றுக்கொண்டதாகவோ தோல்வியுற்ருல் அவசரகாலச் சட்டத்தை மக்கள் எதிர்க்கிருர்கள் என்ருே கருதமுடியாதுஎன்றும் திரு. மொரார்ஜி பத்திரிகை நிருபர்கள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் கூறினார்' (இ)

## பெகினின் ஆளும் கட்சிக்கு படுதோல்வி

ஜெருஸலம், நவ. 8
இஸ்ரேலில் நடைபெற்ற மாநகராட்சி தேர்தலில் பிரதமர் திரு. பெகினின் ஆளும் கட்சி படுதோல்வி அடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சியான தொழிற் கட்சிக்கு எதிர்பார்த்ததை விட அமோகமாக வெற்றி கிடைத்துள்ளது. (இ)

## 'ஒலிம்பிக் - 80' விருந்தினர்களுக்கு 'மொழிப்பிரச்னே' இருக்காது

மாஸ்கோ, நவ. 8
1980ல் மாஸ்கோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை கண்டுகளிக்க வரும் வெளிநாட்டு விருந்தினர்களுக்கு மாஸ்கோ நகரில் 'மொழிப் பிரச்னே' இருக்காது ஏனெனில் ஒலிம்பிக் விருந்தினர்களோடு அவர்களின் சொந்த மொழியிலேயே உரையாடி வரவேற்கவென மாஸ்கோவிலுள்ள 5,000 டாக்ஸி சாரதிகள் ஆங்கிலம், பிரெஞ்சு. ஸ்பானிஷ், ஜெர்மன் மொழிகளில் விசேஷ பயிற்சிபெற்று வருகிருர்கள்.

இவ்வாறு பயிற்சி பெறுபவர்களில் 28 சாரதிகள் அண்மையில் தமது பரீட்சைகளில் சித்திபெற்றுள்ளனர். (இ)

## ஈரானில் முன்னுள் அமைச்சர்கள் கைது!

தெஹ்ரான், நவ. 8
ஈரானில் புதிதாகப் பதவி ஏற்ற இராணுவ அரசு முன்னுள் அமைச்சர்கஷ் சிலரையும் முன்னுள் இரகசியப் பொலிஸ் அதிபரையும் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்துள்ளது.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவே முன்னுள் அமைச்சர்களும் மற்றும் சில பிரமுகர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று புதிய பிரதமர் ஜெனரல் அஸாரி தெரிவித்துள்ளார்.

பத்திரிகைகளுக்கு விதிக்கப்பட்ட தடையையும் பத்திரிகையாளர்கள கைதுசெய்யப்பட்டதையும் தொடார்ந்து நேற்று இரண்டாவது நாளாக பத்திரிகைகள் எதுவும் வெளிவரவில்லை.

இதேவேளையில் ஆங்காங்கே கலவரங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றும் அறிவிக்கப்பட்டது. (இ)

## எம். ஜி. ஆர். அதிர்ச்சி

சென்னை, நவ. 8
தமிழ்நாடு நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவுக்கு 100 பேர் பலியான செய்தி கேட்டு தாம் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளதாக தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் வாஷிங்டனிலிருந்து தமிழ் நாடு தலைமைச் செயலாளருக்கு அனுப்பியுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார். (இ)

## பிரிட்டிஷ் விவசாய நிபுணர்கள் நடத்திய ஆய்வு

(புலோலி)
கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பிரிட்டிஷ் விவசாய நிபுணர்கள் இருவர் விவசாயம் சம்பந்தமான சுற்றுலா மேற்கொண்டு ஆய்வு நடத்தினர். இந்நிபுணர்கள் இங்குள்ள விவசாயிகளைச் சந்தித்து. அவர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், நீர்ப்பாசன வசதி, மண்வளம் ஆகியன பற்றிக் கேட்டறிந்ததோடு கூட்டுறவு முறையில் விவசாயம் மேற்கொள்வது பற்றி ஆலோசனைகளையும் தெரிவித்தனர்.

இப்பகுதி விவசாயிகள், தமது வருமானம் வெங்காயம், மிளகாய் ஆகியவற்றிலேயே தங்கியுள்ளதென்றும், தற்போது இவற்றின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் தாம் பெரிதும் பாதிப்பும், நஷ்டமும் அடைந்துள்ளதாகவும் பிரிட்டிஷ் நிபுணர்களிடம் தெரிவித்துக்கொண்டனர்.

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(புலோலி)
தேசிய வடிகால் வழங்கல் சபையில் கணக்கு லிகிதர்களுக்கான விண்ணப்பங்கள கோரப்பட்டுளளன.

க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் கணிதம் உட்பட நாலு பாடங்களில் திறமைச் சித்தியும், க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் தேசிய தொழில் கற்கைகளிலான தராதரப்பத்திரமும், வர்த்தக நிறுவனமொன்றில் கணக்கு லிகிதராக கடமையாற்றிய ஒரு வருட அனுபவமுளளோர் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டுளளது,

## இன்றைய இராசிப்பலன்

ஐப்பசி மாதம் 23-ந் திகதி

வியாழக்கிழமை

(9-11-78)

**மேடம்:** முன்னேற்றப் பாதையில் தடைகள் உருவாகும் எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாக விருக்கும். உள்வீட்டிலேயே பூசல்கள் தோன்றக் கூடும்.

**இடபம்:-** அன்னைவழி ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், பொருள் வரவிற்கும் இடமுண்டு.சிறப்பான தினம.

**மிதுனம்:-** அறவழிகளில் மனநாட்டம்செல்லும், இளைய பிள்ளையால் மகிழ்ச்சிக்கிடமுண்டு மனைவாழ்க்கையில் சுபகருமங்களுக்கும்இடமுண்டு

**கடகம்:-** பகைமூட்டம் வட்டமிடும், வீணை வார்த்தைகளால் மனப்புண்படும், தொழில் துறையிலும் முட்டுக்கட்டைகள் தோன்றும்.

**சிங்கம்:-** கனிவான சம்பவங்கள் இடம்பெறும். களஸ்திரவழியாலும் பொருள் வரவிற்கு இடமுண்டு, காதலர்களுக்கு கனகுஷியானதினம்.

**கன்னி:-** அரசபயத்திற்கு இடமுண்டு. வழக்கு விவகாரங்களில் மாட்டிக்கொள்ள வேண்டாம். நிதானத்துடன் இருக்கவும்.

**துலாம்:** பிதாவழிமூலம் ஆதரவு கிடைக்கும் எதிர்பார்த்த வரவிலும் திருப்தி ஏற்படும் மகிழ்ச்சிகரமானதினம்.

**விருச்சிகம்:** தொழில் துறையில் முன்னேற்றமான நிலை தென்படும் குடும்பத்திலும் சுமுகமான நிலை தென்படும். இடமாற்றத்திற்கும் இடமுண்டு.

**தனுசு:-** பொருள் வரவு பொழுதுபோக்கு இவைகளுடன் உற்சாகமூட்டும செய்தியும் கிடைக்கும். பெரியோர் ஆதரவும் உண்டு.

**மகரம்:-** பிரிவின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள் தொழில் துறையிலும் தயக்க நிலை தென்படும். பொருள் விரையத்திற்கும் இடமுண்டு

**கும்பம்:-** அவசரமுடிவில் மூலம் ஆபத்தை விலைகொடுத்து வாங்குவீர்கள். மனதிலும் அமைதி குன்றும், அடக்கம் நன்று.

**மீனம்:-** இலட்சியவாதிகளுக்கு சிறப்பான தினம் உரிமைகளைப் பெறுவதில் புதிய பாதை தென்படும. வசீகரப் பேச்சின்மூலம் காரியத்தைச் சமாளிப்பீர்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## பாடசாலைகளில் 'சீஸன்'ரிக்கற்

(புலோலி)
பருத்தித்துறை இ போ ச டிப்போ, பாடசாலை மாணவர்களின்நன்மைகருதி பாடசாலை மாணவர்களுக்கான பருவகால (சீஸன்) டிக்கட்டுகளை பாடசாலையில் வைத்தே வழங்கிவருகிறது.

இம்மாதம் முதல் ஆரம்பமான இப்புதிய நடைமுறை பாடசாலை மாணவ, மாணவிகளுக்கு பெரும் நன்மையளித்துளளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சனசமூகநிலைய சமாஜ அங்குரார்ப்பணம்

(பண்டத்தரிப்பு)
சண்டிலிப்பாய் வலி தென் மேற்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களின்சமாஜ அங்குரார்ப்பணக் கூட்டமும் கருத்தரங்கும் இம்மாதம் 10ம் திகதி வலி. தென் மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு கே. கோபாலரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ். மாவட்ட சனசமூகநிலையங்களின் மேற்பார்வையாளர் திரு கிருஷ்ணசாமி உட்படப் பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

## சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினர்

[நமது மூதூர் நிருபர்]
மூதூரில் ஏற்பட்டுள்ள வெள்ளக் கஷ்டத்தையடுத்து கடல் கொந்தளிப்பும் அகோரமாக இருந்ததால் பொருட்கள் ஏற்றி இறக்கும் வத்தைகள் திருமலை துறைமுகத்திற்குச் சென்று பொருட்களை ஏற்றி மூதூருக்கு இறக்குமதி செய்யமுடியாதநிலை ஏற்பட்டது.

இதையடுத்து மூதூரில் மண்ணெண்ணைத் தட்டுப்பாடும் ஏற்பட்டது.

இதை சாதகமாகப் பயன்படுத்திய ஒருசில வர்த்தகர்கள் தாங்கள் ஏற்கனவே இறக்குமதிசெய்துவைத்திருந்த மண்ணெண்ணையை ஒரு போத்தல் ஒரு ரூபா விதம் பொதுமக்களுக்கு வழங்கினர்.

## ஜேர்மன்பிரதிநிதி வருகிருர்

(மட்டுவில்)
மேற்கு ஜெர்மன் சமஷ்டிக் குடியரசிலிருந்து தனியார் துறை ஸ்தாபனப் பிரதிநிதி ஒருவர் டிசம்பர் மாதம் முதலாம் வாரத்தில் சாவகச்சேரிக்கு வருகிருர்.

''கொன்ரேட் அட்நோர் ஸ்ரிவ் ரங்'' என்ற பிரபல ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு ஸ்தாபனத்தின் பிரதிநிதியே இவர். இவர் சாவகச்சேரியில் நடைபெறும் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவார். இந்த அபிவிருத்தித் திட்டங்களை நுணுகி ஆராய்வார்.

சாவகச்சேரித் தொகுதியின் மாபெரும் அபிவிருத்தி பத்தாண்டுத் திட்டம் ஒன்றை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் இலங்கைப் பல்கலைக்கழக புவியியல் ஆராய்ச்சிப் பேராசிரியர்களின் உதவியுடன் ஆரம்பித்துள்ளார். இந்த அபிவிருத்தித் திட்டத்திறகான ஒரு அலுவலகத்தையும் இவர் திறந்துள்ளார். இந்த அலுவலகத்தில் மூன்று லிகிதர்களும், ஒரு அபிவிருத்தி உத்தியோகத்தரும் கடமையாற்றுகிருர்கள்.

ஜெர்மன் பிரதிநிதி இந்த அபிவிருத்தித் திட்டத்தினைப் பார்வையிடுவார். இந்தப் பாரிய அபிவிருத்தித் திட்டத்திற்கு மேற்படி ஸ்தாபனம் நிதிஉதவி செய்யலாம் என்றும் நம்பப்படுகிறது. (உ)

பிரதி ஒன்று ரூபாய் 1/- மட்டுமே

★ உறுதிகள் ★ சான்றிதழ்கள் ★ ஏனைய பத்திரங்கள்

ஒரே நிமிடத்தில்

போட்டோ கொப்பிகள் செய்து தரப்படும்

தொடர்பு கொள்ளவும்:

த பினன்ஸ் கம்பனி லிமிடெட்,

191, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி எண்: 7680

Rio (Jaffna)
Dyl 4 Shows
KILLERS OF
KILLIMANJARO
(Mistery-Thrill)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர்-விஜயா
நல்லநேரம்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
4-45, 7-15, 10-00
KARAKATOA
EAST OF JAVA

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி-பத்மினி-சௌகார்-நாகேஷ்
பேசும் தெய்வம் (புதிய பிரதி)

வின்ஸர் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள் போன்: 466
2-வது ஜனத்திரள் வாரம்
ஃ சிவராம் ஃ சந்திரகலா ஃ தனரத்தினம்
நடித்த
அநுராகம்

ராஜா (யாழ். நகர்) தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன்குமாரி
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30 & 9-45
எம். ஜி. ஆர். --- சரோஜாதேவி
நடித்த
திருடாதே [புதிய பிரதி]

மனோகரா [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
நடித்த
தனிப்பிறவி
(புத்தம் புதிய பிரதி)

வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஜெய்சங்கர், சுஜாதா நடித்த
நீ ஒரு மகாராணி
(புதி பிரதி)

லிடோ (யாழ். நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
Sidney James, Kenneth Williams
in
'CARRY ON MATRON'
(Color)

தினசரி 4 காட்சிகள்
ராணி [யாழ். நகர்]
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன் (ஈஸ்ட்மன் கலர்)
இன்று வெள்ளி விழா பிரதமவிருந்தினர் விசேஷ
ஆணையாளர் திரு. க. சிவஞானம் அவர்களால்
பல விலையுயர்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.
ரிக்கட் அடிக்கட்டைகள் மூலம் அதிர்ஷ்டம்
பார்க்கப்படும்.

## "தொழிற்சங்கம்
# ஆசிரியப்பணியின் புனிதம் காக்கவேண்டும்"

(மட்டுவில்)

'ஆசிரியர்கள் ஏதாவது ஒரு தொழிற் சங்கத்தில் அங்கம் வகிக்க வேண்டும். தொழிற் சங்கம் ஆசிரியப் பணியின் புனிதத்தன்மையைக் காப்பாற்ற அக்கறை எடுக்கவேண்டும். ஆசிரியத் தொழில் மிகவும் புனிதமானது.'

இவ்வாறு அகில இலங்கை தமிழர் ஆசிரிய சங்கத்தின் நாலாவது ஆண்டு விழாவில் பேசிய சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. சி. இராஜநாயகம் கூறினார்.

அகில இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சாவகச்சேரிக்கிளையின் நான்காவது ஆண்டு பொதுக்கூட்டம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் ஆசிரியர் திரு தா. காசிநாதன் தலைமையில் நடைபெற்றது. இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட தலைவர் திரு. எஸ் நடராஜா நிர்வாகச் செயலாளர் திரு. அ. பொன்னம்பலம் உட்பட பலர் கலந்து கொண்டனர். வட்டாரக்கல்வி அதிகாரி திரு. சி. இராஜநாயகம் தொடர்ந்து கூறியதாவது:

'ஆசிரியர்கள் கல்விக் கொள்கையில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப தம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும் ஆரம்ப, கனிஷ்ட, உயர்கல்வியில் புதிய மாற்றங்கள் ஏற்படும் போது ஆசிரியர்கள் அதிபர்கள் அதைநன்கு அறிந்து, அதன் வெற்றிக்காகக் கடமைகளைத் திறம்படச் செய்ய வேண்டும்.'' என்றார்.

புதிய நிர்வாகிகள் தேர்வும் நடைபெற்றது. ஆசிரியர் திரு. ரி. காசிநாதன் தலைவராகவும், ஆசிரியர் திரு. கெ. சங்கரப்பிள்ளை செயலாளராகவும், ஆசிரியர் திரு. ஏ. விநயாகமூர்த்தி பொருளாளராகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். மேலும் 11 பேர் கொண்ட நிர்வாகக்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (உ)

# ஹெற்றா விளையாட்டுக் கழகம்

[யாழ்ப்பாணம்]

கரவெட்டி ஐக்கியவிளையாட்டு கழகத்தின் பொதுக் கூட்டம் விளையாட்டுக்கழகத் தலைவர் திரு. க. இராசையா தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் கழகம் கடந்தகாலததில செய்த சாதனைகள் பற்றி எடுத்துக் கூறப்பட்டது அதன்பின் கரவெட்டி ஐக்கிய விளையாட்டு கழகத்தின் பெயர் மாற்றி "ஹெற்றா விளையாட்டுக்கழகம்" என பொதுச்சபையினர் ஏகோபித்த முடிவுடன் மாற்றி வைக்கப்பட்டது.

ஹெற்றா விளையாட்டு கழகத்தின் நிர்வாகிகள் வருமாறு தலைவர் திரு. க இராசையா உபதலைவர் திரு நா நடராஜா காரியதரிசி செல்வன் த பஞ்சலிங்கம் பொருளாளர் எ டி போல் ஆறு பேர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர் [உ]

# நுண்கலைமன்ற இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நுண்கலை மன்றத்தின் இம்மாத இசை நிகழ்ச்சியாக செல்வி தனதேவி சுப்பையாவின் வயலின் கச்சேரி இடம் பெறும். இம் மாதம் 11ம் திகதி சனிக்கிழமை மாலை யாழ். ட்றிம்மர் மண்டபத்தில் நடைபெறும் இக்கச்சேரியில் செல்வன் ஞானசுந்தரம் ஐயாக்கண்ணுதேசிகரும் சேர்ந்து வயலின் வாசிப்பார். திரு. ஏ. எஸ், இராமநாதன் மிருதங்கமும், கே. கணேசன் கஞ்சிராவும், செல்வன் ராஜு இராமநாதன் கடமும் வாசிப்பர்.

மன்றத்தின் அடுத்த மாத இசை நிகழ்ச்சி திரு வி. கே. கானமூர்த்தி, வி. கே. பஞ்சமூர்த்தி சகோதரர்களின் நாதஸ்வரக் கச்சேரியாகும். (அ)

# பாடசாலையின் நீண்டகாலத் தேவை நிறைவு பெறும்

(பண்டத்தரிப்பு)

'வளர்ச்சி பெற்று விளங்கும் இப் பாடசாலையின் நீண்டகாலத் தேவையான விளையாட்டு மைதானம் ஒன்றை அமைக்கவும் இடுகுக ளினல் வேயப்பட்டு அடிக்கடி ஒழுகும் பாடசாலை வகுப்பறை மண்டபங்களுக்கு ஓடுகள் போட்டு திருத்தியமைக்கவும் தொகுதி எம்.பி.யின் உதவியுடன் அடுத்த ஆண்டில் நிதிஒதுக்க நடவடிக்கை எடுக்கவிருக்கின்றேன்'

இவ்வாறு அளவெட்டி தெற்கு அருணசலம் வித்தியாசாலையில் 15 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள வகுப்பறை மண்டபத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில் காங்கேசன்துறை வட்டாரக் கல்வியதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரப் குறிப்பிட்டார்.

வித்திபாசாலை அதிபர் திரு. கே. பொன்னுத்துரை தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் அருட்கவி சீ. விநாசித்தம்பி ஆராதனைப்படத்தை திரைநீக்கம்செய்துவைத்தார். அளவெட்டி அருணோதயக்கல்லூரி அதிபர் திரு. வி, சிவசுப்பிரமணியம் பாடசாலைக் கொடியை ஏற்றிவைத்தார். மாணவமாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும்இடம்பெற்றன.

# "தமிழர் விடுதலைக்குத் தோள்கொடுத்தவர்"

(வண்ணார்பண்ணை)

''தமிழர் விடுதலைக்காக தொடுத்த போராட்டங்களிலெல்லாம் தொண்டனாகவும் தானைத் தலைவனாகவும் தோள் கொடுத்து அஞ்சாநெஞ்சம் படைத்தவராகத் திகழ்ந்தவர் காலஞ்சென்ற அருமைநாதர்''

இவ்வாறு தமிழர் கூட்டணி சிக்கழகத் தலைவரும், ஊர்காவற்றுறைத் தொகுதியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. வ. நவரத்தினம் திரு. அருமைநாதரின் மரணம் குறித்த விடுத்த அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: ''தன் நாட்டு மக்களுக்கும், தான் பிறந்து வளர்ந்த கிராமத்து மக்களுக்கும் தன்னலம் கருதாது உழைத்து ஓடாய்ப்போன கதைதான் அருமைநாதரின் சரித்திரம்.

''அன்னரின் மரணத்தினல் துயருறும் அவரின் துணைவியாரும் புதல்வர்களும், தங்கள் ஆற்ருெணுத்துயரில் நன்றிமறவாத தமிழ்மக்கள் எல்லோரும் பங்குபற்றுகிறார்கள் என்பதை அறிந்து சாந்தியடைவார்கள் என்று நம்புகிறேன்''.

# யாழ்...

3-ம் பக்கத் தொடர்ச்சி[

அனுமதிக்கப்பட்டிருந்தால் கட்டாயம் ஒத்துழைத்திருப்பார்கள். அட்டவணைப்படி சேவை நடப்பதாயின் அதிகாரிகள் தேவையில்லை. ஆனல் தவிர்க்கமுடியாத சூழ்நிலை ஏற்படும்போது அதற்கேற்ப ஒரு முடிவெடுத்து அதைச் செயலாற்ற முடியாவிடின் அவர்கள் அங்கு ஏன்?

பாதை சரியில்லை (ஏற்றுக் கொள்ளக்கூடியசமாதானமே) பஸ் சரியில்லை (அதுவும் உண்மையே) என்று சாட்டுச் சொல்லி சாரதியோ, நடத்துநரோ ஒத்துழைக்க மறுத்தால் அதை மன்னிக்கலாம். பிரயாணிகள் பயணக்களை காரணமாகப் பொறுமை இழந்தால் அதையும் ஓரளவு மன்னிக்கலாம் ''ஏன் சில்லறை கொண்டுவரவில்லை'' என நடத்துநரோ ''மிச்சக் காசு எங்கே'' என பிரயாணிகளோ சண்டையிடவில்லை. ஆனல் அதிகாரிகளின், உத்தியோகத்தர்களின் அசிரத்தை... தவறுகள் மன்னிக்கப்படலாம், குற்றங்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

எஸ். சிவகுமாரன்
எந்திரவியல் துறை,
பொறியியல்பீடம்
பேராதனை.

# 100 வது தயாரிப்பு

ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி நாட்டுக் கூத்து நாடக மன்றத்தார் ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூக நிலையத்தின் வெள்ளி விழாவில் தமது நூறுவது படைப்பான ''சகோதர பாசத்தை'' மேடையேற்றினர்.

இம்மன்றத்தைச் சேர்ந்த நாட்டுக் கூத்துக் கலைமணி அண்ணவியார் தம்பித்துரை எழுதிய இந்நாடகத்தில ஆரோக்கியநாதன், சூசைமுத்து, சுவாம்பிள்ளை, நல்லதம்பி, அந்தோனிப்பிள்ளை, இராசு, இராசா, தியாகு, செபஸ்தியாம்பிள்ளை, ஊர்த்தையா, கிறிஸ்தோப்பர், திரவியம், டேவிட், நவம் சிங்கராசா, உதயகுமார், செல்வராசா, வரதமணி, அருந்ததி ஆகியோர் நடித்தனர்.

ஆரோக்கியநாதன், நல்லதம்பி, நவம், சுவாம்பிள்ளை, கிறிஸ்தோப்பர், சிங்கராசா, தியாகு, இராசு, டேவிட், துரை ஆகியோர் நன்ருக நடித்தனர்.

புதிய நடிகர்களை அறிமுகப் படுத்தியது பாராட்டப்பட வேண்டியது

அண்ணவியார் தம்பித்துரை இம்மன்றத்திற்கு ஆற்றி வரும் கலைச்சேவை புனிதமானது. இந்தவகையில் இந் நாட்டுக்கூத்து தனிச் சிறப்புப் பெற்றுள்ளதில் வியப்பெதுவுமில்லை.

புரட்சிகரமான அமைப்பில் இது உருவாகியுள்ளது.

இ. வரதராசா

# நஞ்சருந்திஞராம்

(யாழ்ப்பாணம்)

ஓட்டுமடத்தில் தற்சமயம் வசிப்பவரும் சித்தன்கேணி வாசியுமான பாலசுப்பிரமணியம் என்பவர் நச்சு திராவகம் அருந்தி அபாயகரமான நிலையில் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வீட்டில் ஏற்பட்ட தகராறின் காரணமாகவே இவர் திராவகம் அருந்தியதாக கூறப்படுகின்றது (நா. நிரு)

# மாபெரும் தமிழ்அறிஞர்

(சுழிபுரம்)

கிழக்கில் வாழ்ந்த மாபெரும் தமிழ்அறிஞர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை மறைவு தமிழ் உலகுக்கு மாபெரும் நஷ்டமாகும். தமிழ்மொழிக்கு பல்வகையில் அறிஞர் செய்த தொண்டை நாம் நன்றியோடு போற்றவேண்டியது கடமையாகும். இவ்வாறு வழக்கம்பரை தமிழ் மன்றத்தினர் புலவர்மணி பெரியதம்பி மறைவையொட்டி வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளனர்.

தமிழ் அறிஞர் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை வாழும் காலத்தில் செய்த பணிகள் நிலையான இடத்தைப்பெற்றுள்ளன. வெண்பாவுக்கு ஒரு பெரியதம்பி என்று கற்றவர்கள் பெருமைகொள்ளும் அளவுக்கு புலவர் வாழ்ந்து காட்டினர். இவ்வாறு அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாணவர்களுக்கு
## சோறுவழங்க ஏற்பாடு

(கொழும்பு)
பாடசாலை மாணவர்களுக்கு மதிய போசனமாக சோறுவழங்க கல்வி அமைச்சு ஏற்பாடு செய்துவருகிறது.

பெற்றோர், சமூக ஸ்தாபனங்கள் ஆகியோரின் உதவியுடனேயே மாணவர்களுக்கு சோறு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

பாடசாலைகளுக்கு அரிசி கறிச்சாமான்கள், சமையல் பாத்திரங்கள் ஆகியவற்றை வழங்கி அங்கேயே சமைத்து சோறு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதலில் பரீட்சார்த்தமாக சில பாடசாலைகளிலேயே சோற்று உணவு வழங்கப்பட இருக்கிறது என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தற்போது மாணவர்கள் மதிய உணவாக பிஸ்கட் வழங்கப்பட்டு வருவது தெரிந்ததே. (இ)

புயல்-மழை:

## இந்திய மீனவர் எண்மர் பொலிகண்டியில் ஒதுங்கினர்

(புலோலி)
இந்தியா - நாகபட்டினத்தைச் சேர்ந்த எட்டு மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் சென்ற சமயம் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட புயலிலும் மழையிலும் அகப்பட்டு, தத்தளித்துக்கொண்டுவந்து இலங்கையின் பொலிகண்டிக் கரையில் கரைசேர்ந்துள்ளனர்.

சி. நடராசன், சி. பொன்னப்பன், செ. இரத்தினசாமி, செ. நடராசன், ஆ. மதியழகன், மு. பொன்னப்பா, கு. வைத்திலிங்கம், ஆ. மாணிக்கவேல் என்போரே புயலில் அகப்பட்டு பொலிகண்டிக்கரை சேர்ந்தவர்களாவர்.

பொலிகண்டி மீனவர்கள் இவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ததுடன் வடமராட்சி வடக்கு, கிழக்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திருவை. வேலும்மயிலுவிற்கும் இதுபற்றித் தெரிவித்தனர்.

உதவி அரசாங்க அதிபர் இவ்வெட்டுப்பேரையும் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். (உ)

## இந்திரா காந்தி . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி).
மதி இந்திரா காந்தியை ஆதரித்திருந்தார். தமிழக சட்டசபை எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு. கருணாநிதி, ஜனதா வேட்பாளரை ஆதரித்திருந்தர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் பிரச்சாரம் எதிலும் கலந்து கொள்ளவில்லை. திரு. மு. கருணாநிதி பிரச்சாரக்கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றினர்.

### ஜாமீன் இழப்பு

இத் தேர்தலில் போட்டியிட்ட ஏனைய 26 அபேட்சகர்களும் தங்களது ஜாமீனை (கட்டுப்பணத்தை) இழந்தனர். கடந்த 26 தடவைகளும் தேர்தலில் போட்டியிட்ட "தேர்தல் மன்னன்" ரங்கசாமி இம்முறையும் 27வது தடவையாக கட்டுப்பணத்தை இழந்து 'சாதனை' ஏற்படுத்தியுள்ளார்.

## நீதிமன்றத்தில் இந்திரா 27-ல் ஆஜரர்வார்

சிக்மகளூர், நவ. 8
சிக்மகளூர் தொகுதியிலிருந்து இந்திய லோகசபைக்குத்தெரிவு செய்யப்பட்ட திருமதி இந்திராகாந்தி பொய்யான விபரங்களை தேர்தல் திணைக்களத்தில் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் தொடரப்பட்ட வழக்கில் இம்மாதம் 27ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகஉள்ளார்.

வேட்புமனுத்தாக்கல் செய்வதற்கு முன்னர் தாம் சிக்மகளூர் தொகுதியில் ஆச்சிரமம் ஒன்றில் தங்கியிருந்ததாகத் திருமதிகாந்தி பொய்யான தகவல்களைக்கொடுத்திருந்தார் என்றே அவர் குற்றம்சாட்டப்பட்டுள்ளார்.

இக்குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் திருமதி காந்தி 6 மாதங்களுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என்றும் பாராளுமன்றத்தில் இருக்கமுடியாது என்றும் தீர்ப்பு வழங்கப்படும் என்று சட்ட மந்திரி திரு. சாந்தி பூஷண் தெரிவித்துள்ளார். (இ)

### கிராமிய அபிவிருத்தி வங்கி சட்டமூலம்

[கொழும்பு]
தேசிய அபிவிருத்தி வங்கியொன்றை நிறுவுவதற்கான சட்டமூலத்தை நேற்று திதிட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

கிராமிய தொழில்கள், விவசாயம், வர்த்தக அபிவிருத்திக்கு இந்த வங்கி உதவிகளையும், குறுகிய நீடியகால கடன் வசதிகளையும் இந்த வங்கி வழங்கும்.

உள்நாட்டு, வெளிநாட்டு மூலதனக்காரர்களுக்கு ஊக்கமளிப்பதாகவும் இந்த வங்கி விளங்கும் என்று அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

### கைது!

பெங்களூர் நவ 8
சிக்மகளூர் தொகுதியில் கல்லூரி மாணவி செல்வி காயத்ரி பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான சம்பவம் தொடர்பாக பெங்களூரில் மறியல் போராட்டம் நடத்த முனைந்த நடிகை திருமதி நந்தலாவும் ம்ற்றும் மூவரும் பொலிசாரினல் கைதுசெய்யப்பட்டனர்.

திருமதி நந்தலாவைப் பின்னர் அவரது தந்தை பிணையில் அழைத்துச் சென்றார்.

### சாக்கு உற்பத்திக்கு தொழிற்சாலை

[கொழும்பு]
சாக்கு உற்பத்தி செய்வதற்கான மிகப்பெரிய தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கு கைத்தொழில் விஞ்ஞானத்துறை அமைச்சு முயற்சி செய்துள்ளது.

இத் தொழிற்சாலையை அமைப்பதற்கு 10 கோடி ரூபாய் தேவைப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இலங்கையின் தேவைக்கு தினமும் 2 கோடி 50 லட்சம் சாக்குகள் தேவைப்படுகின்றதாம்.

### கூட்டணி......

(1ம் பக்கத் தொடர்ச்சி)
தலைமை வகித்த பிரதி சபாநாயகர் திரு. நோர்மன் வைத்தியரத்ன தெரிவித்தார்.

பிரதம மந்திரி திரு. பிரேமதாசா பதிலளிக்கையில், இது பற்றி உங்கள் கட்சியினரிடமே கேட்டுப்பாருங்களேன் என்று திரு. இரத்தினத்துக்கு கூறினார்.

தாம் விசாரித்துப் பார்த்ததாகவும் அவ்வாறு எவரும் கட்சி மாறமாட்டார்கள் என்றும் திரு: இரத்தினம் கூறினார்.

பொறுத்திருந்து பாருங்கள் என்றார் நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்க.

இதற்கு முன்னதாக விவசாயிகளிக்கு மக்கள் வங்கிக் கடன்நிறுத்தப்படுவதுபற்றிநல்லூர் எம். பி. திரு. எம் சிவசிதம்பரம் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த பிரதி விவசாய அபிவிருத்தி அமைச்சர் முன்பு வாங்கிய கடன்களை செலுத்திவிட்ட விவசாயிகளுக்கு மீண்டும் கடன் வழங்கப்பபடும் என்று தெரிவித்தார். (ம)

### அமிர்...

1-ம் பக்கத் தொடர்ச்சி)
டத்தை அவர் கைவிட்டுள்ளார்:

திரு. அமிர்தலிங்கம் வெளிநாடு சென்ற பின்னர் உள்நாட்டில் எழுந்துள்ள அரசியல் நிலைமை காரணமாகவும், தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக ஏற்பட்டுள்ள சில நெருக்கடிகள் காரணமாகவும அவர் அவசரமாக இலங்கை திரும்புவதாகத் தெரிகின்றது.

திரு. அமிர்தலிங்கம் ஞாயிற்றுக்கிழமை காலை 10-20 மணிக்கு கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வந்து இறங்குவார். கட்சிப் பிரமுகர்களும் மற்றவர்களும் அவரை வரவேற்பார்கள்.

அன்று மாலை மூன்று மணிக்கு தமிழர் விடுதலைச கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் திரு. அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கின்றது. திரு. அமிர்தலிங்கத்தின் கோரிக்கையின் பேரிலேயே இக்கூட்டம் நடைபெறவிருக்கின்றது.

திரு. அமிர்தலிங்கம் தமிழ்நாட்டில் தங்கி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள முடியாமலிருப்பது குறித்து தமிழ்நாடு தி. மு. கழகத் தலைவர் திரு. கருணாநிதிக்கும் ஏனையவர்களுக்கும் இங்கிருந்தே அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்னொருமுறை திரு. அமிர்தலிங்கம் அங்கு வருவாரென்று அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [ம]

### மழையைத்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
இயங்கிவருவதாகவும் தெரிவித்தார். பருத்தித்துறை, கரவெட்டி, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய இடங்களுக்கான தொலைபேசி சேவையும் பாதிக்கப்பட்டுள்ளன. (இ)

# எண்ணை விலை அதிகரிக்கும்!

பாக்தாத், நவ 8
எண்ணையின் விலையை அதிகரிக்க எண்ணை ஏற்றுமதி நாடுகள் நிறுவனம தீர்மானித்துள்ளது.

எண்ணை விலையை அதிகரிப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளபோதிலும் என்ன விகிதத்தில் விலையை உயர்த்துவது என்பதில் எண்ணை ஏற்றுமதி நாடுகளிடையே அபிப்பிராயபேதம் ஏற்பட்டுள்ளது.

சவூதிஅரேபியா 5 வீத விலை அதிகரிப்பு போதுமானது என்று அறிவித்துள்ள அதே வேளையில் இதைவிட மேலும் அதிக வீதத்தில் எண்ணையின் விலையை அதிகரிக்கவேண்டும் என்று ஏனைய எண்ணை ஏற்றுமதி நாடுகள் தெரிவித்துள்ளன. (இ)

நள்ளிரவில் நடைபெற்ற வாக்கெடுப்பு:

## பல்கலைக்கழக சட்டமூலம் நிறைவேறியது

(கொழும்பு)
பல்கலைக்கழக சட்டமூலம் நேற்று நள்ளிரவு 12-04 மணிக்கு நிறைவேறியது.

சட்டமூலத்தை ஆதரித்து 130 பேர் வாக்களித்தனா. தமிழர் விடுதலைக் கூட்டணி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி எம் பிக்கள் எண்மர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

இம்மசோதாமீது குழு நிலையில் விவாதம் நடைபெற்றபோது, பல்கலைக்கழக சட்டமூலத்தின் 118 வது பிரிவு நீக்கப்படவேண்டும் என்றும், 147 வது பிரிவு திருத்தப்படவேண்டும் என்றும் பதில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் கொண்டு வந்த திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளபடடவில்லை. (ம)

இலங்கை - இந்திய

# விமானச் சேவை விரைவில்ஆரம்பம்
## -- ஜனதிபதி ஜே.ஆர்.

சென்னை, நவ 8
தற்போதுநிறுத்தப்பட்டுள்ள ஏயர் சிலோன் இந்திய-இலங்கை விமானச் சேவை மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப் என்று இலங்கை ஜனதிபதி திரு. ஜே ஆ. ஜெயவர்த்தன சென்னையில் பத்திரிகையாளர் மத்தியில் தெரிவித்தார், [இ]

அருமைநாதரின்

## இறுதி ஊர்வலத்தில் பெருந்தொகை மக்கள்

(யாழ்ப்பாணம்)
நாரந்தனை முன்னாள் கிராமசபைத் தலைவரும், சமூகத் தொண்டருமான அமரர் திரு ச, அருமைநாதரது இறுதி ஊர்வலத்தில், பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

இறுதி ஊர்வலத்திற்கு முன்பாக அன்னாரது இல்லத்தில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில், முன்னாள் ஊர்காவற்றுறை எம், பியும், சுயாட்சிக்கழக தலைவருமான திரு வி நவரெத்தினம், முன்னாள் நாரந்தனை கிராமசபைத் தலைவர்கள், திரு. த. கண்முகலிங்கம், சு. கதிரித்தம்பி, சட்டத்தரணிகள், கே. ஜோடீஸ்வரன், ப. கதிரவேலு, ஆர். மரியாம்பிள்ளை, ஏ. எஸ். நடராசா, எஸ். கே மகேந்திரன் என் ஸ்ரீகாந்தா உட்பட பலர் உரையாற்றினர்.

இறுதி ஊர்வலத்தில் கலந்துகொள்ள முடியாமைக்கான ஆழ்ந்த அனுதாபத்தை காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ இரத்தினமும் கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளையும் தெரிவித்திருந்தனர் இறுதி ஊர்வலத்தின் போது பூதவுடல் தாங்கிய பேழை சிவப்பு பச்சை நிறம் கொண்ட தமிழர் சுயாட்சிக் கழக கொடியினல் மூடப்பட்டிருந்தது. [கெ]

பொதுக் கணக்குகள்

### குழுவுக்கு சூசைதாசன் தலைவர்

[கொழும்ப]
பாராளுமன்ற பொதுக் கணக்குகள் குழுவுக்கு மன்னார் எம். பி திரு. எஸ். சூசைதாசன் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இப்பதவியை முன்னர் திரு. எஸ். தொண்டமான் வகித்தார். அவர் அமைச்சரானதால் இப்பதவியும், குழுவில் அவரது உறுப்பினர் பதவியும் காலியானது. காலியான குழுவின் உறுப்பினர் பதவிக்கு திருமலை எம். பி. திரு. சம்பந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். [ம]

### திருப்பதியில் ஜே. ஆர்.

(சென்னை)
இலங்கை ஜனதிபதி திரு. ஆர். ஜயவர்த்தன நேற்று ஆந்திரப்பிரதேசத் திலுள்ள திருப்பதி வெங்கடாசலபதியைச் சென்று தரிசித்தார்.

இன்று பிற்பகல் திரு. ஜயவர்த்தனவும் குழுவினரும்நாடு திரும்புகிறார்கள்.

### விசேஷ......

(1-ம் பககத் தொடர்ச்சி)
செய்ய அனுமதிக்கப்படுமாயின் தாம் விளக்க அறிக்கை சமர்ப்பிக்கத் தயாராய் இருப்பதாகவும் திரு. பண்டாரநாயக்கா தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் முன்னாள்காணி விவசாய அமைச்சர் திரு. கொப்பேகடுவ தம்மீதான குற்றச்சாட்டுகளுக்கு விளக்க அறிக்கையொன்றை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 9ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone 889, Registered a s Newspaper in SriLanka.